என்எல்சி சுரங்க விரிவாக்கத்துக்காக விளை நிலங்களை கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து நெய்வேலியில் நடந்த போராட்டத்தில் பங்கேற்று பேசிய பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்.

என்எல்சியின் நிலம் கையகப்படுத்தும் பணி தொடர்ந்தால்

கடலூர் உள்பட 5 மாவட்டங்களில் தீவிர போராட்டங்களில் ஈடுபடுவோம்

● நெய்வேலி ஆர்ப்பாட்டத்தில் அன்புமணி ராமதாஸ் ஆவேசம்

● விருத்தாசலம்

என்எல்சி நிறுவனம் இனியும் தொடர்ந்து நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்கொண்டால் கடலூர் மாவட்டம் மட்டுமல்ல, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் தீவிர போராட்டங்களில் ஈடுபடுவோம் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

என்எல்சி 2-ம் சுரங்க விரிவாக்கப் பணிகளுக்காக 86 ஹெக்டேர் நிலங்களை சேத்தியாதோப்பு அருகேயுள்ள வளையமாதேவி பகுதி விவசாயிகளிடமிருந்து வாங்கிய என்எல்சி நிறுவனம், அவற்றை கடந்த இரு தினங்களாக போலீஸார் பாதுகாப்புடன் கையகப்படுத்தி வருகிறது. இதற்கு பாமக தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நெய்வேலி ஆர்ச்கேட் பகுதியில் பாமக மாவட்டச் செயலாளர் கோ.ஜெகன் தலைமையில் நேற்று முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பேசிய அன்புமணி ராமதாஸ், "தமிழகம் தற்போது மின் மிகை மாநிலமாக திகழ்கின்ற நிலையில், என்எல்சி மின்சாரம் அவசியமில்லை. எனவே இந்நிறுவனத்தை இங்கிருந்து வெளியேற்ற வேண்டும். தமிழகம் முழுவதும் 2030-க்குள் புதுப்பிக்கவல்ல எரிசக்தி மூலம் மின்னுற்பத்தி செய்யப்படும் என்று முதல்வர் பேசியுள்ளார். ஆனால், தற்போது என்எல்சி நிறுவனத்துக்கு நிலம் கையகப்படுத்தும் பணியை தமிழக அரசு மேற்கொள்கிறது.

எதற்கெடுத்தாலும் மத்திய அரசுடன் மோதல் போக்கை கடைபிடிக்கும் தமிழக முதல்வர் ஸ்டாலின், என்எல்சி விவகாரத்தில் மட்டும் மத்திய அரசோடு கூட்டு சேர்ந்திருப்பதன் மர்மம் என்ன? என்எல்சி பிரச்சினை கடலூர் மாவட்டத்துக்கான பிரச்சினையல்ல; மாறாக தமிழகம் முழுவதுக்குமான பிரச்சினை என்பதை விவசாய சங்கப் பிரதிநிதிகள் உணரவில்லை.

நெய்வேலிக்கு வாருங்கள்

டெல்டா பகுதியைச் சேர்ந்த கதிராமங்கலம் உள்ளிட்ட விளை நிலப் பகுதிகளில் நிலக்கரி எடுப்பதை அறிந்தவுடன் கொந்தளித்த விவசாய சங்கத்தினர் என்எல்சி பிரச்சினைக்கு மட்டும் குரல் கொடுக்க முன்வராதது ஏன்? ஜல்லிக்கட்டு போராட்டத்துக்காக சென்னை மெரினா நோக்கிச் சென்றவர்கள், தமிழக விவசாயிகளின் பிரச்சினையான என்எல்சிக்கு முடிவுகட்ட நெய்வேலி நோக்கி வர வேண்டும்.

காவல்துறையை வைத்துக் கொண்டு விவசாயிகளை அச்சுறுத்தி, விளைந்த பயிர்களை வெட்டி எடுக்கின்ற நிகழ்வை பார்த்தபோது, இரு தினங்களாக தூக்கமின்றி தவித்தேன். ஸ்டெர்லைட் நிறுவனத்தைக் காட்டிலும் பல மடங்கு மோசமானது என்எல்சி நிறுவனம். இனி இந்த நிறுவனம் இங்கு தேவையில்லை. எனவே என்எல்சியை தமிழகத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

உலகம் முழுவதும் காலநிலை மாற்றம் ஏற்பட்டு, பூமி வெப்பமடைந்து, 1 லட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இயற்கை பேரிடர் ஏற்பட்டுள்ளது. உணவுப் பஞ்சம் ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது. என்எல்சி போன்ற நிறுவனங்களால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும். அப்போது நெல்லுக்கு பதிலாக நிலக்கரியை உண்ண முடியுமா? மத்திய, மாநில அரசுகள் இங்குள்ள விவசயிகளின் வாழ்வாதாரத்தை உணர்ந்து, நிலம் கையகப்படுத்தும் பணியை கைவிட வேண்டும். மாறாக தொடர்ந்து நிலம் கையகப்படுத்தும் பணியில் ஈடுபட்டால் கடலூர் மாவட்டம் மட்டுமின்றி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் சாலை மறியல் நடத்துவோம். எங்களது போராட்டம் தீவிரமாகும். மேற்கண்ட மாவட்டங்கள் ஸ்தம்பிக்கும்" என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில வன்னியர் சங்கத் தலைவர் பு.தா. அருள்மொழி, பாமக சமூக நீதி பேரவைத் தலைவர் வழக்கறிஞர் பாலு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முற்றுகைப் போராட்டத்தை முன்னிட்டு விழுப்புரம் சரக டிஐஜி ஜியாவுல் ஹக் தலைமையில் 2 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

புதுச்சேரியில் சிபிஎஸ்இ பள்ளிகளில் புதிய கல்விக் கொள்கை

அரசு பள்ளிகளில் பாலவாதிகா படிப்புகள்

▶ அடுத்த கல்வியாண்டில் நடைமுறைக்கு வருகிறது

● புதுச்சேரி

புதுச்சேரியில் அரசு பள்ளிகள் உட்பட அனைத்து சிபிஎஸ்இ பள்ளிகளிலும் புதிய கல்விக் கொள்கை அமலாகியுள்ளது. இச்சூழலில், அடுத்த கல்வியாண்டில் புதுச்சேரி அரசு பள்ளிகளில் 3 வயதுடைய இளஞ்சிறார்களுக்கான பாலவாதிகா படிப்புகள் தொடங்க வாய்ப்புள்ளதாக கேந்திரிய வித்யாலயா முதல்வர் ஜோஸ் மேத்யூ, ஜவஹர் நவோதயா முதல்வர் கண்ணதாசன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதிய கல்விக்கொள்கை அமலாகி, மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளோம். புதிய கல்விக் கொள்கையில், இளஞ்சிறார்கள் 3 வயதில் பாலவாதிகா வகுப்புகளில் சேர்க்கப்படுவர். இதனுடன் 1, 2-ம் வகுப்புகள் வரையில் முதல் பிரிவு அடிப்படை வகுப்புகள் என நடத்தப்படும். இது, 5 ஆண்டுகளை உள்ளடக்கியது. அதையடுத்து 5-வது வகுப்புகள் வரையில் மூன்றாண்டுகள் ஆயத்த படிப்பு நடத்தப்படும். 8-ம்வகுப்பு வரை மூன்றாண்டுகள் இடைநிலைப் படிப்பு நடத்தப்படும். 12-ம் வகுப்பு வரையிலான நான்காண்டுகள் மேல் நிலைப்படிப்பு இளைஞர்களை வளமானவர்களாக மாற்றும். புதிதாக, மூன்று வயதில் பாலவாதிகா படிப்பில் சேர்ப்பதால் பள்ளிப் படிப்பு கூடுதல் காலமாக மாறாது. தற்போது படித்து வரும் குழந்தைகள் பழைய முறையிலேயே தொடரலாம்.

முதன்முறையாக பாலவாதிகா படிப்புகள் தொடங்க நாடு முழுவதும் தேர்வான 49 பள்ளிகளில், புதுச்சேரி கேந்திரிய வித்யாலயா பள்ளியும் ஒன்று. பாலவாதிகாவில் அடிப்படை கல்வி, எண் கணிதம் ஆகியவை இளஞ்சிறார்களின் மனநிலைக்கு ஏற்றவாறு அமையும். இனி அனைத்து சிபிஎஸ்இ பள்ளிகளிலும் புதிய கல்விக் கொள்கை அமலாகி, புதுச்சேரி அரசு பள்ளிகளில் அடுத்த கல்வியாண்டில் பாலவாதிகா படிப்புகள் தொடங்கப்படும்.

தற்போது கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தச்சு, மட்பாண்டம் தயாரித்தல், தையல், எம்பிராய்டரி ஆகிய படிப்புகள் அடிப்படையிலும், 6,7-ம் வகுப்புகளுக்கு முன் தொழிற்திறன் பாடங்கள், செயற்கை நுண்ணறிவு பாடங்கள், 8, 9-ம் வகுப்புகளில் இருந்து தொழில்சார் பாடங்களை அறிமுகம் செய்துள்ளோம். சில படிப்புகளை பிடிக்காவிட்டால் அதற்கு மாற்று பாடங்களை தேர்வு செய்யலாம்.

புதுச்சேரியில் கேந்திரிய வித்யாலயாவில் அடுத்த கல்வியாண்டில் பாலவாதிகா வகுப்புகளின் எண்ணிக்கை இரண்டாக உயர்த்தப்படும். மேலும் இரு இடங்களில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளைத் தொடங்க அரசு நிலத்தை அளித்தால், அதற்கான பணிகளை மத்திய அரசு தொடங்கும்.

ஜவகர் நவோதயா மாவட்டத்துக்கு ஒரு பள்ளிதான் அமையும். அதே நேரத்தில் புதுச்சேரியில் சிறுபான்மையினர், எஸ்சி, எஸ்டி பிரிவினர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் மேலும் ஒரு பள்ளி தொடங்க மத்திய அரசை புதுச்சேரி அரசு நாடினால் அனுமதி கிடைக்கும். நவோதயா பள்ளியில் 6 முதல் 12-ம் வகுப்புகள் வரை மாணவர்கள் இலவசமாக தங்கி படிக்கும் வசதி உண்டு என்று தெரிவித்தனர். நேர்காணலின் போது, ஆதித்ய வித்யாஷ்ரம் முதல்வர் நடேசன் உடனிருந்தார்.

நடைப்பயிற்சியின் போது தவறி விழுந்ததால் கே.எஸ்.அழகிரி காயம்

▶ சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பினார்

● சென்னை

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, சிதம்பரம் அருகே நேற்று நடைப்பயிற்சி மேற்கொண்டபோது தவறி விழுந்ததில் அவருக்கு நெற்றி மற்றும் காலில் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பின் நேற்றே வீடு திரும்பினார்.

ராகுல்காந்தியின் எம்பி பதவி இழப்பு, நீதிமன்றங்களில் ராகுல்காந்திக்கு எதிராகத் தீர்ப்புகள் வருவது, மணிப்பூர் கலவரத்தில் பெண்கள் பாலியல் வன்கொடுமை போன்ற காரணங்களால் தொடர்ந்து மத்திய அரசுக்கு எதிராக அறிக்கைகள் விடுவது, ரயில் மறியல் போராட்டம், மெழுகுவர்த்தி ஊர்வலம் போன்ற பணிகளில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி சமீப நாட்களாகப் பரபரப்பாகக் காணப்பட்டார். இந்நிலையில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் அடுத்த கீரப்பாளையத்தில் உள்ள சொந்த கிராமத்துக்கு சில தினங்களுக்கு முன்பு சென்றிருந்தார். இந்நிலையில் நேற்றுகாலை அங்கு நடைப்பயிற்சி மேற்கொண்டபோது, தவறி விழுந்ததில், அவருக்கு நெற்றிலும், கால் மூட்டு பகுதியிலும் லேசான காயம் ஏற்பட்டது. அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பினார். தற்போது ஓய்வெடுத்து வருகிறார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி.

இந்த திடீர் விபத்தால், நேற்று மாலை காட்டுமன்னார்கோவிலில் நடைபெற்ற, தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் எல்.இளையபெருமாளின் நூற்றாண்டு தொடக்கவிழாவில் பங்கேற்க இயலவில்லை என சத்யமூர்த்திபவன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அன்புமணி கைதைக் கண்டித்து

விழுப்புரம் மாவட்டத்தில் 13 இடங்களில் சாலை மறியல்

● புதுச்சேரி

நெய்வேலி போராட்டத்தில் ஈடுபட்ட பாமக தலைவர் அன்புமணி கைதைக் கண்டித்து, விழுப்புரம் மாவட்டத்தில் அக்கட்சியினர் 13 இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதில் 200 பேர் கைதாயினர்.

விழுப்புரம் ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகம் எதிரில் பாமக நகரச் செயலாளர் ராஜா தலைமையில், திண்டிவனம் தனியார் உணவகம் அருகிலுள்ள சந்திப்புப் பகுதியில் வார்டு உறுப்பினர் மணிகண்டன், வட்டாட்சியர் அலுவலகம் அருகில் வன்னியர் சங்க நிர்வாகி கருணாநிதி தலைமையிலும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டமங்கலம், கண்டாச்சிபுரம், செஞ்சி, கூட்டேரிப்பட்டு, பொன்னங்குப்பம், முருக்கேரி, வானூர் ஆகிய இடங்களில் பாமக ஒன்றியச் செயலாளர்கள் முத்து, கார்த்திகேயன், பிரபு, முருகன், ரகு, சுபாஷ், நிர்வாகக் குழு உறுப்பினர் செங்கேணி, பொருளாளர் மாலதி, வன்னியர் சங்க நிர்வாகி ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பாமகவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த மறியல் போராட்டங்களில் 200-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

புதுச்சேரியில்...

நெயவேலி போராட்டத்தில் அன்புமணி ராமதாஸ் மற்றும் புதுவை மாநில பாமக கணபதி ஆகியோர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பாகூரில் அக்கட்சி நிர்வாகி சந்திரசேகர் தலைமையில் கன்னியக்கோவில் அருகே பாமகவினர்சாலை மறியலில் ஈடுபட்டு கைதாயினர்.

புதுச்சேரி இந்திராகாந்தி சிலை அருகிலும் பாமகவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீஸார் சுமார் 50 பேரை இப்பகுதியில் கைது செய்தனர்.

திண்டிவனம் நகர்மன்ற கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் வெளிநடப்பு

● விழுப்புரம்

திண்டிவனம் நகராட்சியில் நேற்று மாலை நகரமன்ற கூட்டம் நடைபெற்றது. நகர்மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். நகராட்சி ஆணையர் தமிழ்ச்செல்வி முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில், தான் எழுப்பிய கேள்விக்கு மட்டும் நகராட்சி ஆணையர் பதில் அளிக்கவில்லை என அதிமுக நகர்மன்ற உறுப்பினர் ஜனார்த்தனன், மைக்கை தரையில் அடித்து உடைத்தார். பின்னர் அதிமுக நகரமன்ற உறுப்பினர்கள் ஜனார்த்தனன், சரவணன், கார்த்திக், திருமகள் ஆகியோர் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

ஆனால், தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை நகர்மன்ற உறுப்பினர்கள் முன்வைத்தனர். அனைத்து வார்டுகளிலும் ஆய்வு செய்து பிரச்சினைகள் தீர்க்கப்படும் என நகராட்சி ஆணையர் பதில் அளித்தார்.

பாரதியார் பல்கலைக்கூட முதல்வர் பதவி நீக்கம்

● புதுச்சேரி

புதுவை பாரதியார் பல்கலைக்கூட பொறுப்பு முதல்வராக பி.வி.போஸ் செயல்பட்டு வந்தார். ஆனால் ஏஜசிடிஇ, யுஜிசி விதிகளை மீறி, இவர் பொறுப்பு முதல்வராக நியமிக்கப்பட்டதாக எதிர்ப்பு எழுந்தது. இவரை பதவி நீக்கம் செய்யக்கோரி மக்கள் உரிமை கூட்டமைப்பு தலைமையில் பல்வேறு சமூக அமைப்பினர் போராட்டங்கள் நடத்தினர். இவருக்கு வழங்கப்பட்டு இருந்த நிதி அதிகாரத்தை, முறைகேடாக பயன்படுத்தியதால் அது பறிக்கப்பட்டது. இதுகுறித்து தலைமைச் செயலர் தலைமையிலான தலைமை ஊழல் கண்காணிப்புப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், பாரதியார் பல்கலைக்கூட பொறுப்பு முதல்வர் பி.வி.போஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவருக்கு பதிலாக, இசைத்துறை உதவிப் பேராசிரியர் எல்.அன்னபூர்ணா பொறுப்பு முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக மக்கள் உரிமை கூட்டமைப்பு செயலாளர் சுகுமாரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பி.வி.போஸை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்த அரசுக்கு நன்றி. இது எங்கள் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும். மேலும், தகுதி இல்லாமல் நியமிக்கப்பட்ட 7 உதவி பேராசிரியர்களை உடனடியாக பணி நீக்கம் செய்ய வேண்டும். நிதி முறைகேடு, மாணவர்களுக்கு வகுப்பு எடுக்காத குற்றச்சாட்டு மீது விரைந்து விசாரணை நடத்த வேண்டும். துறை ரீதியான விசாரணை நிலுவையில் உள்ளதால், இசைத்துறை உதவிப் பேராசிரியர் பி.வி. போஸை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு

மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண்.21 / 2023 - 24 / தவஅ / நாள்: 27.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி - 2023-24** தலைப்பின் கீழ் **சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, மற்றும் தேனி (நெ) க(ம)ப** கோட்டங்கள் சார்ந்த பணிகளுக்கு **இணைய வழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளி **22.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 05.08.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 4121 / ஒப்பந்தப்புள்ளி / 2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம்.

வரி விளம்பரங்கள்

பொது

சுற்றுலா

5 ஷீரடி பண்டரிபுரம் மந்திராலயம், மினி தாஜ்மஹால், எல்லோரா ஆக.13, செப்.10, அக்.1, நவ.5
9 காசி, ஆக்ரா, டெல்லி திரிவேணி சங்கமம், கயா செப்.4, அக்.9, நவ. 20
14 காசி, டெல்லி, அயோத்தி ஹரித்துவார், ஆக்ரா, -செப். 25
16 நேபாள், முக்திநாத், காசி அயோத்தி - செப். 20, அக்.11, நவ.15
16 பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி-செப். 4, அக்.9
பஞ்சதுவாரகா ராஜஸ்தான்
11 ஆந்திரா 11 108 திவ்யதேசம்
3 9நவகிரக சுற்றுலா
6 ஆறுபடைவீடு 2 ஜவ்வாது மலை
6 நீர்வீழ்ச்சி 2 அஹோபிலம்
10 கோவா, மும்பை, கர்நாடகா
6 சிங்கப்பூர், மலேசியா
4 துபாய் 9 ஸ்ரீலங்கா
5 அந்தமான் தாய்லாந்து
SRINIVASA TOUR 9384854569

பொது

பொது அறிவிப்பு

பொது அறிவிப்பு

விழுப்புரம் பதிவு மாவட்டம், மரக்காணம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் 05-08-2016 அன்று, 2735/2016 ஆவண எண்ணாகப் பதிவு செய்யப்பட்ட அசல் தாய் செட்டில்மெண்ட் பத்திரத்தை 29-06-2023 அன்று காலை 11.00 மணியளவில், கோட்டக்குப்பம், இந்தியன் வங்கி எதிரில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுக்கச் செல்லும் போது தொலைத்து விட்டேன். கண்டெடுப்பவர்கள் தொடர்புகொள்ளவும்.

திரு. சங்கர் த/பெ. திரு. தங்கவேல்

நெ. 411, வெள்ளாக்குளம், நடுக்குப்பம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம், தமிழ் நாடு - 604 303.

சுய செய்தி

பெயர்மாற்றம்

பெயர் மாற்றம்

புதுச்சேரி- 605502, கூடப்பாக்கம், ஸ்ரீ மங்களபுரி நகர், 5 வது மெயின் ரோடு, பிளாட் எண் 272, என்ற முகவரியில் வசிக்கும் JAYAPRAGASH (D.O.B) 19.04.1977) S/o. Selvakoumar என்கிற எனது பெயரை JEYAPRAKASH @ SIVAKUMAR என்று பெயர் மாற்றம் செய்து கொள்கிறேன் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

-JAYAPRAGASH

பெயர் மாற்றம்

கடலூர் - 608502, பரங்கிப்பேட்டை, C புதுப்பேட்டை, கிழக்கு தெரு, நெ.228 என்ற முகவரியில் வசிக்கும் THIYAGARAJ S/o. Pichavaram (D.O.B) 20.12.1975) என்கிற எனது பெயரை THIYAGARAJAN என்று பெயர் மாற்றம் செய்து கொள்கிறேன் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

-THIYAGARAJ

பெயர் மாற்றம்

புதுச்சேரி - 605 013, சாரம், பீட்டர் நகர், எல்லப்பிள்ளைச் சாவடி சாலை, நெ. 13, விலாசத்தில் வசிக்கும் KEERTHIK KUMAR R PATEL (DOB:04-05-1995) S/o. RAMESH KUMAR PATEL ஆகிய நான் எனது பெயரை KEERTHIK KUMAR PATEL என்று பெயர் மாற்றம் செய்து கொண்டேன்.

---KEERTHIK KUMAR R PATEL

பெயர் மாற்றம்

புதுச்சேரி - 605 013, சாரம், பீட்டர் நகர், எல்லப்பிள்ளைச் சாவடி சாலை, நெ. 13, விலாசத்தில் வசிக்கும் TARUN KUMAR R PATEL, (DOB:05-12-1999) S/o. RAMESH KUMAR PATEL ஆகிய நான் TARUN KUMAR PATEL என்று பெயர் மாற்றம் செய்து கொண்டேன்.

---TARUN KUMAR R PATEL

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	27.07.2023-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46009420000677	1) M/s. RR இன்ஜினியரிங் ஒர்க்ஸ் மற்றும் பேபரிக்கேஷன்ஸ், உரிமையாளர் திரு.ராஜசேகர் R, 2) திரு. ராஜசேகர் R, 3) திருமதி. சித்ரா, க/பெ. திரு. ராஜசேகர் R	29-03-2022	09-05-2023	ரூ.10,28,420/- (ரூபாய் பத்து இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து நானூற்றி இருபது மட்டும்)	14.08.2023 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.11,66,000/- (ரூபாய் பதினொறு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரம் மட்டும்	ரூ.1,16,600/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூறு மட்டும்)	30.08.2023 காலை 11.00 மணிமுதல் மாலை 02.00 மணிவரை	29.08.2023, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக்கு சாலை, தி.நகர், சென்னை - 600017.

அடமான சொத்தின் விவரம் : புதுச்சேரி பதிவு மாவட்டம், புதுச்சேரி சார் பதிவு மாவட்டம், புதுச்சேரி நகராட்சி, முதலியார்பேட் கம்யூனி கிராமம் எண்.45, கொம்பாக்கம் வருவாய் கிராமம், கொம்பாக்கம், வார்டு-எல், பிளாக் எண்.2, டி.எஸ்.எண்.18/2, ஆர்.எஸ்.எண். 53/2, கடஸ்டர் எண்.376, பட்டா எண்.278 மற்றும் வார்டு-எல், பிளாக் எண்.2, டி.எஸ்.எண். 18/1, ஆர்.எஸ்.எண்.53/1, கடஸ்டர் எண்.375 பி, பட்டா எண்.119-க்குட்பட்ட லாட் எண்.143 வடக்கு பக்கம் ஒரு பகுதி அளவுகள் மேற்கில் 15 அடி, கிழக்கில் 20 அடி, தெற்கில் 72 அடி, வடக்கில் 76 அடி, மொத்த பரப்பு 1295 சதுர அடி. **எல்லைகள் : கிழக்கில் :** மனை எண்.148, **மேற்கில் :** நகராட்சி சாலை, **வடக்கில் :** கால்வாய், **தெற்கில் :** மனை எண்.143 ஒரு பகுதி. **அளவுகள் :** (சதுர அடி/சதுர யார்டு, இதர) : 1295 சதுர அடி கொண்ட மனை எண்.143 (N), இயற்கை மற்றும் ஒப்புதல் உபயோகம்: (a) ஃப்ரீ ஹோல்ட், (b) குடியிருப்பு. புதுச்சேரி பதிவு மாநிலம் மற்றும் புதுச்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.பாஸ்கர் நாயுடு, தொடர்பு எண். 8142000809/8142000061. Email id: info@bankauctions.in / subbarao@bankauctions.in.** மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு.மாரிசாமி (மொபைல் எண். 9087102345), email : marisamy.m2@janabank.com; திரு. ரஞ்ஜன் நாயக் (மொபைல் எண். 9590858249), email: ranjan.naik@janabank.com** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 29.07.2023, இடம் : பாண்டிச்சேரி **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).